

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் பகுதிகழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஏற்பாட்டில் நேதாஜி நகர் அருகில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி பொதுமக்களுக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.



சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்கு பகுதி, 68 (அ) வட்ட தி.மு.க. சார்பில் தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு முத்தமிழ் அறிஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன், பகுதிக் கழகச் செயலாளர் ஐ.சி. எப்.வ.முரளிதரன், வட்டக் கழகச் செயலாளர் பி.டி.சி.எஸ்.ரவி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.தனசேகர், மு.துளசி, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நாட்டில் அதிகரித்து வரும் தூக்கக் கோளாறுகள், அவற்றால் உடல்–மன நலத்தில் ஏற்படும் பாதிப்புகளுக்கு

# விழிப்புணர்வு - சிகிச்சை வசதிகளை வலுப்படுத்த ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக.8-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், ஆகஸ்ட் 7, 2026 அன்று மக்களவையில், நாட்டில் அதிகரித்து வரும் தூக்கக் கோளாறுகள், அவற்றால் உடல் மற்றும் மனநலத்தில் ஏற்படும் பாதிப்புகள், விழிப்புணர்வு, சிகிச்சை வசதிகள் மற்றும் முதன்மை சுகாதார சேவைகளில் தூக்கக் கோளாறு மேலாண்மையை வலுப்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.



ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் அளித்த பதிலில், தேசிய மனநல ஆய்வு மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் ஆய்வுகள் மனநல சவால்கள் மற்றும் சிகிச்சை இடைவெளிகளை அடையாளம் காண உதவியுள்ளதாக தெரிவித்தார். மனநல பாதிப்புகளை குறைக்கும் நோக்கில் தேசிய மனநலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், அதன் மாவட்ட மனநலத் திட்டம் நாட்டின் 767 மாவட்டங்களில் நடைமுறையில் உள்ளதாகவும் கூறினார்.

இதன் கீழ் வெளிநோயாளர் சிகிச்சை, ஆலோசனை, உளவியல் ஆதரவு, மருந்துகள், வெளிச்சேவை மற்றும் மாவட்ட அளவில் 10 படுக்கைகள் கொண்ட உள்நோயாளர் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், நாடு முழுவதும் 1.8 லட்சத்திற்கும் மேற்பட்ட துணை சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்களாக மேம்படுத்தப்பட்டு, மனநல சேவைகள் அவற்றில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். மனநலப் பயிற்சி வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன், மனஅமைதி, ஓய்வுப் பயிற்சி, ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் நல்ல தூக்கப் பழக்கங்களை ஊக்குவிக்கும் ஊக்குவிக்கும் நலவாழ்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், 'பிட் இந்தியா' உள்ளிட்ட இயக்கங்கள் ஆரோக்கியமான தூக்கத்திற்கு தேவையான உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவித்து வருவதாகவும் கூறினார்.

தேசிய தொலை மனநலத் திட்டத்தின் கீழ் 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் 53 டெலிமனாஸ் மையங்கள் செயல்பட்டு வருவதுடன், 20 மொழிகளில் 42 லட்சத்திற்கும் அதிகமான அழைப்புகள் கையாளப்பட்டுள்ளன. மனஅழுத்தம், பதட்டம் மற்றும் மனச்சோர்வால் ஏற்படும் தூக்கப் பிரச்சினைகளுக்காக 24 மணி நேரமும் இலவச தொலைபேசி ஆலோசனை, உளவியல் வழிகாட்டுதல், ஆரோக்கியமான தூக்க முறைகள் குறித்த ஆலோசனை மற்றும் தேவைக்கேற்ப மருத்துவமனைகளுக்கு பரிந்துரையும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், உலக மனநல தினமான 2024 அக்டோபர் 10 அன்று டெலிமனாஸ் மொபைல் செயலியும், காணொலி ஆலோசனை வசதியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக, ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தொ.மு.ச. பேரவை தலைமை அலுவலகமான கலைஞரகத்தில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இதில் பேரவைத் தலைவர் கி.நடராசன், பொருளாளர் கோ.சி.வள்ளுவன், பேரவை நிர்வாகிகள், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கப் பொதுச் செயலாளர் த.சரவணகுமார், இணைப்புச் சங்க நிர்வாகிகள், ஆட்டோ தொ.மு.ச. அமைப்பாளர் பாட்சா பாபு திரளாகப் பங்கேற்றனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் பகுதி அவை தலைவர் ஆர். சி.ஆசைதம்பி தலைமையில் சன்னதி தெருவில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி 1000 பேருக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் மதிய உணவு வழங்கினார். இதில் குறிஞ்சி எஸ். கணேசன், எம்.வி.குமார், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், சாந்தி பக்தன், டி.ஏ.ராஜ், த.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், குருத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம். ராஜா, எஸ்.பாஸ்கர், ஆர்.ரஜினிபாபு, பி.எஸ்.சைலஸ், வி.பழனிவேல், ஆர்.டில்லிராஜ் மற்றும் மாவட்ட பகுதி வட்ட அணியின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### உணவு தானிய சேமிப்பு உள்கட்டமைப்பை மேம்படுத்த

# தமிழ்நாடு அரசிடமிருந்து ஒன்றிய அரசுக்கு முன்மொழிவுகள் வந்துள்ளதா?

## மக்களவையில் - தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 8 –

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் மக்கள வையில் எழுப்பிய கேள்வி வருமாறு:–

கடந்த 5 ஆண்டுகளில், உணவு தானிய சேமிப்பு உள்கட்டமைப்பை உரு வாக்குதல், நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்து வதற்காக ஒன்றிய அரசின் உதவியைக் கோரி, தமிழ்நாடு மாநில அரசிடமிருந்து அரசுக்கு முன்மொழிவுகள் வந்துள்ளதா?



அப்படியென்றால், அத்தகைய முன்மொழிவுகளின் விவரங்கள் என்ன? ஒப்புதல் அளிக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட உதவியின் எண்ணிக்கை மற்றும் ஆண்டு மற்றும் திட்டம் வாரியாக நிலுவையில் உள்ள மீதித் தொகை ஆகிய விவரங்கள் என்ன?

ஒவ்வொரு முன்மொழி வின் தற்போதைய நிலை மற்றும் ஒன்றியஅரசின் உதவியை அனுமதிப்பதில் ஏதேனும் தாமதம் ஏற்பட்டால் அதற்கான காரணங்கள் என்ன?

தமிழ்நாட்டில் தற்போதுள்ள உணவு தானிய சேமிப்புத் திறன், அதன் கொள்முதல் மற்றும் இடையிருப்பு இருப்பு ஆட்சேர்ப்புகள் உட்பட, ஏதேனும் மதிப்பீட்டை ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ளதா?

தமிழ்நாட்டில் நவீன களஞ்சியங்கள் மற்றும் குளிர்பதன வசதிகள் உள்ளிட்ட அறிவியல் பூர்வமான சேமிப்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்து வதற்காக, ஒன்றிய அரசின் உதவியை விரைவாக ஒப்புதல் அளித்து விடுவிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் என்ன? என தே.மலையரசன் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.



முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி சைதை மேற்கு பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., அறிவிப்பிற்கிணங்க கலைஇலக்கியப் பகுத்தறிவுப்பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, இல்லத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு புகழ் அஞ்சலி செலுத்தப்பட்டன. உடன் வட்ட கழக செயலாளர் சை.மு.சேகர், ராஜ்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளில் அவர்தம் நினைவை போற்றும் வகையில் எழும்பூர் தெற்கு பகுதி 58வது வட்ட செயலாளர் வி.விஜயகுமார் தலைமையில் அலங்கரிடக்கப்பட்ட தலைவர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் பகுதி செயலாளர் வி.சுதாகர், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன், மாமன்ற உறுப்பினர் இராஜேஸ்வரிஸ்ரீதர், பகுதி கழக நிர்வாகிகள் ஜெகதீசன்,, ஏ.நித்யராஜ், டி.இளங்கோவன் ஜெ.கார்த்திகேயன், வட்ட நிர்வாகிகள் பாபுசேகர், நசீமா, மாறன், பிச்சைமுத்து, அறிவுநிதி, முரளிகுமார், ரய்மான், துளசிங்கம், புஸ்பராஜ், மு.சரண்குமார் ராஜ்பரத், எஸ்.மதன், ஜி. டோம்னிக், வி.பிரபு, டி.ராஜா, ஜாவித்,சலீம், இக்பால், சபிக், மகளிர் அணி ராணி,தீபா, பூங்கொடி, செண்பகம், பானு ஆர்.விஜய், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8–ஆம் ஆண்டு நினைவுநாளையெட்டி சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை தா. வேலு, பகுதிச் செயலாளர் எஸ்.முரளி ஆகியோர் முன்னிலையில் மயிலை கிழக்கு பகுதி 171 வது வட்டத்தில் வள்ளி ஸ்வரன்கோவில் தோட்டத்தில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் நற்பணி மன்றம், மயிலை பகுதி சுற்றுச்சூழல் அணியின் சார்பில் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். உடன் மாவட்ட பிரதிநிதி மயிலை தென்றல் வி. விஜய், எஸ். ஜிவரத்தினம், த. வேல்முருகன், இரா. பாரதி நாகலிங்கம், எம்.எஸ்.டி.மணிமாறன், சாஸ்தா எஸ்.குமார், மயிலை ஆர். சிவன், நா. பால விக்னேஷ், எம். பாலகிருஷ்ணன், எம்.எஸ். திருநாவுக்கரசு, எம்.சரவணன், எம்.பாஸ்கர், ஆர்.ராஜாமணி, கே.ராஜா உள்ளிட்டோர் இருந்தனர்.



பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி கழக செயலாளர், மண்டலக் குழு தலைவர் வே.கருணாநிதி தலைமையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி, அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அனைத்து கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி தமிழ் நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சென்னை வடக்கு திட்ட மின் கழக தொமுச சார்பில் தண்டையார்பேட்டை கோட்டம் திருவெற்றியூர் பிரிவு அலுவலகத்தில் தலைவர் கலைஞர் படத்திற்கு தமிழ் நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க மாநில முன்னாள் தலைவர் சென்னை வடக்கு திட்ட செயலாளர் கே.சசிகுமார் மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தி ஏழை எளியோருக்கு உணவு வழங்கினார் இந்நிகழ்வில் திட்ட சங்க நிர்வாகிகள் எ.ராஜேந்திரன்,வேதமணி, எம்.இளங்கோவன்,டி. அரி, கோபால் ஜெகதீசன், குசால், முருகன் மற்றும் கோட்ட நிர்வாகிகள்,கிளை சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.